**DEPOSITION OF WITNESS**

**In the Court of District Munsif cum Judicial Magistrate , Srirangam**

**CC.No.101/2025**

**PW-3**

**Date :-04.08.2026**

| | | | |
|---|---|---|---|
| Name | ரெஜி | | |
| த/பெ. | தங்கராசு | Calling | காவல் உதவிஆய்வாளர் |
| Village | சோமரசம்பேட்டை | Religion | |
| Taluk | திருச்சி. | Age | 36/2026 |

அரசு தரப்பு முதல் விசாரணை-

நான் தற்போதுசோமரசம்பேட்டைகாவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து தற்போது அயல் பணியாக சிறப்ப புலானாய்வு துறை திருச்சியில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.07.2023 அன்று பகல் 16 மணிக்கு நான் கொள்ளிடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது திருச்சிமாவட்டம் இலால்குடி தாலுக்கா பள்ளிவிடை அஞ்சல் , அரசு போக்குவரத்து நகரை சார்ந்த ராமையா மகன் ஹரிகரன் என்பவர் நிலையத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்ற நிலைய குற்ற எண்.145/2023 சட்டப்பிரிவுகள் 279, 304(A) இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் . **முதல் தகவல் அறிக்கை அ .சா.ஆ.3 ஆக குறியிடுசெய்ப்படுகிறது.** பின்பு வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-

புகாரின் உண்மை தன்மையை தெரிவதற்காக விசாரணை செய்தோமா என்றால் புகார் பெற்ற பின் சம்பவ இடத்தையும் , மருத்தவமனையில் சென்று விசாரணை செய்தோம். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தோம் . விசாரணை அதிகாரியிடம் மேற்படி விவரங்களை கூறியுள்ளேன். சம்பவம் பற்றி அரசு மருத்தவமனையில் இருந்து தகவல் வந்தது . தகவல் வந்ததற்கு பின்னர்தான் புகார் கொடுத்தார்கள் . முதல் தகவல் வந்தது அரசு மருத்தவமனையில் இருந்துதான் என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கையில் அரசு மருத்தவமனையில் இருந்து வந்த தகவலை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எனது விசாரணையில் மேற்சொன்ன விவரத்தைதான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கையில் என்றைய தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பபட்டது என்றால்

**மறுநாள் அனுப்பியிருக்கலாம் சரியாக தேதி ஞாபகம் இல்லை . நான் சொன்ன, தேதியில்,நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கை பின்னர் எப்போது நீதிமன்றத்திற்கு வந்தது என்று தெரியுமா என்றால் தெரியாது.**

Sd/-xxxx
Taken down by me in open court , read over to his and accepted by him as correct and made his signature

Sd/-K.Vijai Rajesh.,
District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam.